දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

| | |
|---|---|
| අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister | 2784832<br>Fax: 2784825 |
| ලේකම් / செயலாளர் / Secretary | 2784812 |
| කාර්යාලය / அலுவலகம் / Office | 2785141-50<br>Fax: 2784846 |

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
'இசுருபாய'
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. : ED/01/26/1/1/27
தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப கல்விக் கிளை

දිනය / திகதி / Date : 2007.06. 06

சுற்றறிக்கை இல : 2007/11

கல்வி அமைச்சின் சகல மேலதிக செயலாளர்கள்,
கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

## கடித ஆவண செயற்பாடுகளின் போது (Unicode) எழுத்தை பயன்படுத்தல்

கணனிப் பயன்பாட்டில் மேற்கொள்ளப்படும் கடித ஆவணங்களை தயாரிக்கும் செயற்பாடுகளில் போது ஒரு கணனியின் மூலம் தயாரிக்கப்பட்ட கடித ஆவணங்களை மற்றுமொரு கணனியின் உதவியுடன் சோதனையிடும் போது அதன் எழுத்து தொடர்பாக பிரச்சினைகள் எழும். இதற்குக் காரணமாக அமைவது ஒரு கணனிக்காக தனித்தனியான எழுத்து வகைகள் பயன்படுத்துவதாகும். இதனால் கணனிமயப்படுத்தப்பட்ட கடித ஆவணங்களை தயாரிக்கும் பணிகளின் போது சிங்கள எழுத்துகளைப் பயன்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை மட்டுப்படுத்தும் நோக்கில் SLS 1134 கொண்ட யுனிக்கோட் சிங்கள எழுத்து அரசாங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களில் பயன்படுத்துமாறு ஜனாதிபதி செயலாளரினால் 2007.03.14ம் திகதி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கணனி மூலம் தயாரிக்கப்படும் ஆவணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சிங்கள எழுத்து தொடரை பயன்படுத்தும் நோக்கில் இலங்கை தர நிறுவனம் (SLSI) SLS 1134 என்ற அங்கீகரிக்கப்பட்ட எழுத்துத் தொடர் தகவல் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்த ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உரிய சிங்கள எழுத்து வகை ஆவணத்தை திறக்கும் கணனி இல்லாத பட்சத்திலும் கணனியின் பயன்பாட்டில் இருக்கும் யுனிக்கோட் வசதி கொண்ட எழுத்து மூலம் வாசிக்க முடியும். தேர்ந்தெடுக்கும் வசதிகள் போன்றன இவ் எழுத்துத் தொடரின் பயன்பாட்டிலுள்ள வசதிகளாகும்.

இதனடிப்படையில் கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட கடித ஆவணங்களை தயாரித்தல் மற்றும் தகவல்களை பரிமாற்றும் செயற்பாடுகளின் போது அவ் (Unicode) அங்கீகரிக்கப்பட்ட எழுத்தை பயன்படுத்த முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் அது குறித்து கவனம் செலுத்துமாறு அறிவிக்கிறேன்.

யுனிக்கோட் எழுத்தை இணையத்தளத்தில் இருந்து இலகுவாக (Download) பதிவிறக்கம் செய்ய கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளைப் பின்பற்றவும்.

- சிங்களம் /தமிழ் (Unicode) கணனியை தாபிப்பதற்காக Windows XP செயற்பாட்டுத் தொகுதியின் service pack 2+, வைத்திருக்க வேண்டும். Ubuntu 7.x, Red Hat Enterprise Linux5, Debian 4.0 ஆகிய செயற்பாட்டுத் தொகுதியுடன் கணனிக்காக இவ் யுனிக்கோட் எழுத்தை பதிவிறக்கம் செய்யமுடியும்.

- www.fonts.lk/ down.html வெப் தளத்திற்கு பிரவேசிக்கவும். அவ்வேளையில் தோன்றும் தொகுப்பு மூலம் தங்களது தேவைக்கமைய உரிய தொகுப்பை தேர்ந்தெடுத்து பதிவிறக்கம் செய்யவும்.

*tb/d/g1/nus1/circular/circular no. 2007.unicode*

- இதனை திறக்கும் போது தோன்றும் Readme ஆவணத்திலுள்ள ஆலோசனைக்கமைய சிங்கள யுனிக்கோட்டை தாபிக்கவும்.

- தமிழ் யுனிக்கோட் எழுத்தைப் பயன்படுத்துவதற்காக Tamil Unicode Resources ஆகிய பிரிவை தெரிவுசெய்யும் தேவைக்கமைய தேவைப்படும் எழுத்தை பதிவிறக்கம் செய்யமுடியும். அங்கீகரிக்கப்பட்ட சிங்களம் /தமிழ் திறவுகோலை உருவாக்குவதற்காக http://www.fonts.lk/ docs.html உள் பிரவேசிப்பதன் மூலம் மேற்கொள்ளமுடியும்.

Windows XP(SP 2 தொகுப்பு) செயற்பாட்டுத் தொகுதியுடன் கணனிக்காக தயாரிக்கப்பட்ட மென்பொருட்கள் கொண்ட சீடி தட்டு இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரதிநிதிகளிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பாக உரிய தொழில்நுட்ப ஆலோசனைக்காக பணிப்பாளர் அரச துறையின் புனர்நிர்மாண வேலைத்திட்டம் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்புசாதன முகவர் நிறுவனம் 160/24, கிரிமண்டல மாவத்தை கொழும்பு-05. (தொலைபேசி இல : 011-236909/2369100, பெக்ஸ் : 011-236837, மின்னஞ்சல் wasantha@icta.lk) தொடர்பு கொள்ளவும்.

இது தொடர்பாக ஆலோசனைகள் தேவைப்படின் கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்புசாதன கல்விக் கிளையின் கல்விப் பணிப்பாளரைத் தொடர்புகொள்ளவும்.
[தொ.இல – 011 2785821 /மின் அஞ்சல் - de ictedu@moe.gov.lk]

**ஆரியரத்ன ஹேவகே**
செயலாளர்,
கல்வி அமைச்சு.

*th/d/g1/nus1/circular/circular no. 2007.unicode*